## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI

| | | |
|---|---|---|
| Case Number | : | **S.C.No. 113/2021** |
| Deposition Of Witness for | : | PW 1 |
| Name | : | **திருமதி. பாண்டிச்செல்வி** |
| Husband Name | : | திரு. காளிதாஸ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16th April 2025.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பசங்கள். எனக்கு எந்த வருடம் திருமணமானது என்றால் 2001ம் ஆண்டு திருமணமானது. எனக்கு திருமணம் ஆனது முதல் தனியாக எனது கணவருடன் வசித்து வந்தேனா அல்லது மாமனார், மாமியாருடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோமா என்றால் எனது கணவருடன் தனியாக வசித்து வந்தேன். ஆஜர் எதிரி எனது வீட்டின் எதிர் வீட்டில் வசித்து வருபவர் அதனால் தெரியும். எனக்கும், எதிரிக்கும் இரண்டரை வருடகாலம் பழக்கம் இருந்ததா என்றால் ஆமாம். நான் குடியிருந்த வீட்டைச் சுற்றி எத்தனை வீடுகள் இருந்தன என்றால் சுமார் 7, 8 வீடுகள் இருந்தன. சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நிகழ்வு எத்தனை மணியளவில் நடந்தது என்றால் இரவு 7லிருந்து 8 மணிக்குள் நடந்தது. எதிரி எத்தனை மணிக்கு எனது வீட்டிற்குள் வந்தார் என்றால் இரவு 7 மணியளவில் ஒரு விஷேசத்திற்கு நாங்கள் சென்றுவிட்டு எங்களது வீட்டிற்கு வந்த போது எதிரி வந்தார். அந்நேரத்தில் எனது கணவர் வீட்டில் இருந்தாரா என்றால் அப்போது தான் எனது கணவர் கடைக்கு செல்ல வெளியே சென்றிருந்தார். எத்தனை மணிக்கு எனது கணவர் வீட்டிற்கு வந்தார் என்றால் வெளியே சென்றதிலிருந்து அரை மணி நேரத்தில் வந்துவிட்டார். எனது முதல்விசாரணையில் மேற்சொன்ன எனது கணவர் அரை மணி நேரத்தில் வந்தது குறித்தும், எதிரி 7 மணியளவில் எனது வீட்டிற்கு வந்தார் என்பது குறித்தும் சொல்லியுள்ளேனா என்றால் நேரம் குறித்து சொல்லவில்லை. நான் விஷேசத்திற்கு சென்றதாக சொல்வது எந்த ஊருக்கு சென்றேன், என்ன விஷேசத்திற்கு சென்றேன் என்றால் 11.09.2019ம் தேதி பிள்ளையார்பட்டியில் நடந்த அறுபது சாந்தி விஷேசத்திற்கு சென்றேன். போலிசார் விசாரணையில் மேற்சொன்ன அறுபது சாந்தி திருமணம் யார், யாருக்கிடையே நடந்தது என சொன்னேனா என்றால் இல்லை. யார், யார் மேற்படி திருமணத்திற்கு சென்றது என்றால் நானும், எனது கணவரும் பஸ்ஸில் சென்றோம். மேற்படி திருமணமானது எத்தனை மணிக்கு முடிந்தது என்றால் அன்றைய தினம் மதியம் 1.00 மணியளவில் முடிந்தது, அதன் பிறகு எனது சித்தி வீட்டிற்கு சென்று விட்டு அங்கு இருந்துவிட்டு எனது வீட்டிற்கு வந்தேன், மேற்படி சங்கதி போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளில் எதிரி என்னுடன் எவ்வளவு மணிநேரம்

வாக்குவாதம் செய்தார் என்றால் அரை மணிநேரம் செய்திருப்பார். மேற்படி எதிரி எனது வீட்டு வாசலின் முன்பு வந்து எங்கள் வீட்டு கதவை தட்டியும், கல்லைக்கொண்டு எறிந்தும் எதற்காக உனது கணவருடன் சென்றாய் என்றும், உனது கணவருடன் செல்லக்கூடாது என நான் சொன்னேனே என சத்தம் போட்டார், எதிரி சத்தம் போட்டபோது அருகில் உள்ளவர்கள் சத்தம் கேட்டு வந்தார்களா என்றால் பக்கத்து வீட்டுக்காரர்கள் டிவி பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான் சொல்லும் நேரத்தில் எனக்கும், எதிரிக்கும் எந்த வாக்குவாதமும் ஏற்படவில்லை என்றும், எதிரி அங்கு வரவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் வாக்குவாதம் நடைபெற்ற போது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள் யாரும் வரவில்லை என்றும் மேற்படி வாக்குவாதத்தை தடுக்கவில்லை என்றும் நான் சொல்லும் சங்கதியை போலிசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் போலிசார் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. எதிரி என்னைத் தாக்கும்போது தான் பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து விலக்கிவிட்டார்கள், சம்பவத்தின் போது காயமடைந்ததாக சொல்லும் நான் சம்பவத்திற்கு பிறகு காவல்நிலையம் சென்றேனா அல்லது மருத்துவமனை சென்றேனா என்றால் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு எதில் சென்றோம் என்றால் ஆட்டோவில் சென்றோம், எனது கணவர் உடன் வந்தார். ஆட்டோவில் சென்றபோது இரத்தம் அதிகம் வெளியேறியதால் எனது கணவர் மயக்கமடைந்துவிட்டார். மருத்துவமனையில் போலிசாருக்கு தகவல் சொன்னேனா என்றால் தகவல் எழுத போலிசாரே அங்கு வந்துவிட்டனர். மருத்துவமனைக்கு சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்றால் பதட்டத்தில் அது குறித்து எனக்கு தெரியவில்லை. போலிசாருக்கு மருத்துவமனையிலிருந்து யார் தகவல் சொன்னது என்றால் தெரியாது, Treatment செய்து கொண்டிருக்கும்போதே போலிசார் வந்துவிட்டனர். போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 9.00 மணிக்கு வந்தார்கள். எத்தனை போலிசார் வந்தனர் என்றால் 2 போலிசார் வந்தார்கள். போலிசாரிடம் சம்பவம் குறித்து சொன்னேனா என்றால் வாய் மொழியாக சொன்னேன். புகார் யார் எழுதியது என்றால் சம்பவம் குறித்து நான் சொல்லச் சொல்ல எனது மகன் எழுதினார். அ.சா.ஆ.1ல் உள்ள எழுத்துக்கள் எனது மகனால் எழுதப்பட்டதா என்றால் ஆமாம், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. எத்தனை கையெழுத்து செய்தேன்

என்றால் தெரியவில்லை. மேற்படி அ.சா.ஆ.1 புகார் மனுவை யார் எழுதியது என்றால் எனது மூத்த மகன் எழுதினார். நான் சொல்லச்சொல்ல எனது மகன் புகார் மனுவை எழுதினார் என்ற சங்கதியை போலிசாரிடம் சொன்னேனா என்றால் அது குறித்து விசாரிக்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. எனக்கும், எதிரிக்குமான பழக்கம் குறித்து எனது குடும்பத்தார் என்னைக் கண்டித்தார்களா என்றால் ஆமாம். மேற்படி எதிரியுடன் எனது பழக்கத்தால் எங்களது குடும்பத்திற்குள் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி நிகழ்வால் எனக்கும், எனது கணவருக்கும் சண்டை ஏற்பட்டு நான், எனது கணவரை கீழே பிடித்து தள்ளியும் எனது கணவர் என்னை கீழே பிடித்து தள்ளியும் நாங்கள் இருவரும் கீழே விழுந்ததில் கீழே கிடந்த கல்லில் விழுந்து எங்கள் இருவருக்கும் காயம் ஏறப்ட்டது என்றால் சரியல்ல. மேற்படி காயம் ஏற்பட்டதற்கு பின்பு எங்களது குடும்பத்தார் பின் யோசனையின் பேரில் எதிரியை பழி வாங்கவேண்டும் என்பதற்காக எதிரி மீது புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. புகாரில் உள்ள சங்கதிக்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னையும், எனது கணவரையும் அடிக்கவில்லை என்றும், ஆபாசமாக திட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.04.16 18:25:42 +0530